அம்மன், சுவாமி தங்கப் பல்லக்கில் வீதியுலா

▶ மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சித்திரை திருவிழா கடந்த ஏப்ரல் 29ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. 4 ம் நாளான நேற்று, மீனாட்சி அம்மன், சுந்தரேஸ்வரர், பிரியாவிடை ஆகியோர் கோயிலில் இருந்து தங்கப்பல்லக்கில் புறப்பட்டு பக்தர்கள் புடைசூழ, தெற்குவாசல், சின்னக்கடை வீதி வழியாக வில்லாபுரத்தில் உள்ள பாவக்காய் மண்டபத்திற்கு சென்றனர். உள்படம்: சிறப்பு அலங்காரத்தில் மீனாட்சி அம்மன், சுந்தரேஸ்வரர் மற்றும் பிரியாவிடை.

விழிஞ்ஞும் சர்வதேச... முதல் பக்க தொடர்ச்சி

வரும் காலத்தில் மூன்று மடங்காக உயரும். அதன் பின்னர் உலகத்திலேயே மிகப்பெரிய சரக்கு கப்பல்கள் இங்கு வரத்தொடங்கும். இவ்வளவு நாள் இந்தியாவுக்கு வெளியே உள்ள துறைமுகங்கள் மூலம் தான் 75 சதவீதத்திற்கும் அதிகமான சரக்குகள் கொண்டு வரப்பட்டன.

இதன் மூலம் நம் நாட்டுக்கு பெரும் பொருளாதார நஷ்டம் ஏற்பட்டு வந்தது. விழிஞ்ஞும் துறைமுகத்தின் மூலம் இதில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. நம் நாட்டின் பணம் நமக்கே கிடைக்கும். வெளிநாடுகளுக்கு சென்று கொண்டிருந்த பணம் இனி விழிஞ்ஞும் துறைமுகத்தின் மூலம் கேரளாவுக்கும், நம் நாட்டுக்கும் வரும். விழிஞ்ஞும் துறைமுகத்தால் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வியத்தகு மாற்றங்கள் ஏற்படும். இந்த துறைமுகத்தை நான் சுற்றிப் பார்த்தேன்.

குஜராத்தில் கடந்த 30 வருடங்களாக அதானி துறைமுகம் செயல்பட்டு வருகிறது. ஆனால் அதைவிட பெரிய துறைமுகமாக விழிஞ்ஞும் உருவாகியுள்ளது. இது குஜராத் மக்களுக்கு அதானி குழுமத்தின் மீது எரிச்சலை ஏற்படுத்த வாய்ப்பு உண்டு. நம் நாட்டில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் அரசு, தனியார் பங்களிப்புடன் நடைபெற்று வருகிறது. கேரள துறைமுக அமைச்சர் பேசும் போது தனியாருக்கு தொழில்துறையில் அதிக ஊக்கமளிக்க வேண்டும் என்று அதானியை சுட்டிக்காட்டி பேசினார். ஒரு கம்யூனிஸ்ட் அமைச்சர் தான் இவ்வாறு பேசினார் என்பதை அனைவரும் கவனிக்க வேண்டும். இது இந்தியா மாறி வருகிறது என்பதற்கான ஒரு அடையாளமாகும். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் ஒன்றிய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் சார்பானந்த சோனாவால், கேரள கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேக்கர், முதல்வர் பினராயி விஜயன், ஒன்றிய இணை அமைச்சர்கள் சுரேஷ் கோபி, ஜார்ஜ் குரியன் உள்பட கேரள அமைச்சர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். தொடக்க விழாவுக்கு பின்னர் நண்பகல் 12 மணியளவில் பிரதமர் மோடி திருவனந்தபுரத்தில் இருந்து விமானம் மூலம் அமராவதி புறப்பட்டு சென்றார்.

'சசிதரூர் வருகையால் பலரின் தூக்கம் கெடும்'

விழிஞ்ஞும் துறைமுக திறப்பு விழாவில் திருவனந்தபுரம் தொகுதி காங்கிரஸ் எம்.பியும் கட்சியின் மூத்த தலைவருமான சசிதரூர் கலந்து கொண்டார். அண்மை காலங்களில், கட்சித் தலைமைக்கும் சசி தரூருக்கும் இடையே உரசல் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியானது. இது தனது பேச்சில் குறிப்பிட்ட பிரதமர் மோடி, இந்த விழா மேடையில் சசி தரூர் அமர்ந்திருக்கிறார். இந்த செய்தி யாருக்கு போக வேண்டுமோ அவர்களுக்கு போய் சேர்ந்துவிட்டது. சசி தரூர் இங்கு வந்தது பலரின் தூக்கத்தை கெடுத்துவிடும் என்றார்.

மது, இறைச்சியில் தூக்க மாத்திரைகளை கலந்து

துபாய் டிராவல்ஸ் அதிபர் கோவையில் கொலை

கள்ளக்காதலி மகளுக்காக முதியவர் வெறிச்செயல்

பசுபதி பாண்டியன் கூட்டாளிக்கு வலை

கோவை, மே 3: மது, இறைச்சியில் தூக்க மாத்திரைகளை கலந்து கொடுத்து துபாய் டிராவல்ஸ் அதிபர் கோவையில் கொலை செய்யப்பட்டார். கள்ளக்காதலின் மகளுக்காக முதியவர் பசுபதி பாண்டியன் கூட்டாளியுடன் சேர்ந்து கொலை செய்தது தெரிய வந்தது.

தூத்துக்குடியை சேர்ந்தவர் தியாகராஜன் (69). கடந்த சில வருடங்களுக்கு முன்பு இவர் தனது மனைவியை பிரிந்து கோவை பீளமேடு காந்திமா நகர் பகுதிக்கு வந்தார். அப்போது அதே பகுதியை சேர்ந்த கோமதி என்ற பெண்ணுடன் கள்ளக்காதல் ஏற்பட்டது. கோமதிக்கு நிலா மற்றும் சாரதா என்ற 2 மகள்கள் உள்ளனர். அவர்கள் 4 பேரும் சேர்ந்து ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தனர். சாரதாவிற்கு குணவேல் என்பவருடன் திருமணம் நடந்தது. அவர்களுக்குள் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. இதனை தியாகராஜனிடம் சாரதா தெரிவித்துள்ளார்.

இதையடுத்து குணவேலை அழைத்து தியாகராஜன் கண்டித்தபோது அவர்களிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் தியாகராஜன் ஆத்திரம் அடைந்து, குணவேலை சரமாரியாக தாக்கி கொலை செய்தார். அந்த வழக்கில் தியாகராஜன் கடந்த 2016ல் கைது செய்யப்பட்டார். அவருக்கு கோர்ட் ஆயுள் தண்டனை விதித்தது. அதை எதிர்த்து தியாகராஜன் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து ஜாமீனில் வெளியே வந்தார். இதற்கிடையே சாரதா துபாய்க்கு வேலைக்கு சென்றார். அங்கு திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த டிராவல்ஸ் நடத்தி வந்த சிகாமணி (47) என்பவர் சாரதாவுக்கு அறிமுகமாகி உள்ளார். அங்கு அவர்களுக்கு இடையே கள்ளக்காதல் ஏற்பட்டது.

▶ சிகாமணி, தியாகராஜன்

இறந்த பின்னரும் தாக்கிய கள்ளக்காதலி

சிகாமணி தனது பணத்தை திரும்ப தராததால் ஆத்திரத்தில் இருந்த சாரதா திட்டம்போட்டு உறவினர்களுடன் சேர்ந்து தூக்க மாத்திரை கொடுத்து கொன்றார். இறந்த பின்னரும் அவர் மீது ஆத்திரத்தில் இருந்த சாரதா, சரமாரியாக தாக்கி இருக்கிறார். துபாய்க்கு சென்றுள்ள சாரதாவை பிடிக்கும் நடவடிக்கையில் போலீசார் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

இந்த பழக்கத்தில் சிகாமணிக்கு சாரதா ரூ.6 லட்சம் கொடுத்துள்ளார். அதனை சாரதா திருப்பி கேட்டபோது சிகாமணி தானும் அதிகளவில் செலவு செய்திருப்பதால் அந்த பணத்தை திருப்பி தர முடியாது என்று கூறியுள்ளார். இதனால் அவர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. சாரதா கோவைக்கு திரும்பினார். தனது வீட்டில் சிகாமணியுடனான பழக்கத்தை கூறிய அவர் பணத்தை திருப்பிதராததை தெரிவித்துள்ளார். சாரதா கோவைக்கு சென்றது சிகாமணிக்கு தெரியவந்தது. இதையடுத்து அவர் சாரதாவை சமாதானம் செய்வதற்காக கடந்த மாதம் 21ம் தேதி கோவைக்கு வந்தார்.

அவரை சாரதா தனது குடும்பத்துடன் விமான நிலையத்துக்கு சென்று வரவேற்றார். ஆனால் பணத்தை திருப்பி தராத ஆத்திரத்தில் சாரதாவும், அவரது குடும்பத்தினரும் இருந்தனர். எனவே கோவைக்கு வந்த சிகாமணியை தங்கள் வீட்டில் தங்க வைத்து தீர்த்துக் கட்ட முடிவு செய்தனர். இதற்கான திட்டத்தை தியாகராஜன் வகுத்தார். நெல்லையை சேர்ந்த பிரபல ரவுடி பசுபதி பாண்டியன் கூட்டாளி குட்டி தங்கம் என்கிற புதியவன் என்பவரையும் கோவைக்கு வரவழைத்தார். கொலை திட்டத்தின்படி சாரதா குடும்பத்தினர் சிகாமணியை தடபுடலாக கவனித்தனர்.

கடந்த மாதம் 22ம் தேதி இரவு மது குடிப்பதற்காக சிகாமணியை அழைத்துள்ளனர். தொடர்ந்து தியாகராஜன், புதியவனுடன் சேர்ந்து சிகாமணி மது குடித்தார். அப்போது மது மற்றும் இறைச்சியில் 30க்கும் மேற்பட்ட தூக்க மாத்திரைகளை கலந்து சிகாமணிக்கு கொடுத்தனர். சிறிது நேரத்தில் சிகாமணி மயங்கி விழுந்து இறந்தார். இதைத்தொடர்ந்து தியாகராஜன், புதியவன், சாரதா ஆகியோர் சிகாமணியின் உடலை கார் டிக்கியில் ஏற்றி கரூர் பொன்னமராவதி பகுதிக்கு சென்றனர். அங்கு நள்ளிரவில் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் உடலை வீசினர். பின்னர் அங்கிருந்து திருச்சிக்கு சென்றனர். சாரதாவை விமானம் மூலம் துபாய்க்கு அனுப்பி வைத்தனர்.

திருச்சியில் இருந்து புதியவன் நெல்லைக்கும், தியாகராஜன் கோவைக்கும் திரும்பினர். இந்நிலையில் சிகாமணியின் மனைவி பிரியா கணவரை தொடர்பு கொள்ள முயன்று முடியாதால் துபாயில் உள்ள அலுவலகத்திற்கு போன் செய்து விசாரித்தார். அப்போது சிகாமணி கோவைக்கு சென்று இருப்பதாக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். பிரியா கோவைக்கு வந்து பீளமேடு போலீசில் சிகாமணி மாயமாகிவிட்டதாக புகார் அளித்தார்.

இதற்கிடையே சிகாமணியின் உடலை கைப்பற்றிய கரூர் பொன்னமராவதி போலீசார் அடையாளம் தெரியாத உடல் என வழக்குப்பதிந்து அடக்கம் செய்தனர். போலீசார் விசாரணை நடத்தி வருவதை அறிந்த தியாகராஜன் கோவை கோர்ட்டில் சரணடைந்தார். சிகாமணி கொலை செய்யப்பட்டதையும் ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து சரணடைந்த தியாகராஜனை போலீசார் காவலில் எடுத்து விசாரித்து வருகின்றனர். கொலைக்கு உடந்தையாக இருந்த சாரதா, ரவுடி பசுபதிபாண்டியன் கூட்டாளி புதியவன் மற்றும் சிலரை போலீசார் தேடி வருகின்றனர். இந்த சம்பவம் கோவையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மதுரை ஆதீனம் உயிர் தப்பினார்

உளுந்தூர்பேட்டை, மே 3: கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே சேலம் ரவுண்டானா பகுதியில், நேற்று காலை மதுரையிலிருந்து சென்னை சென்ற மதுரை ஆதீனத்தின் கார் மீது பின்னால் சென்ற கார் திடீரென மோதி விபத்து ஏற்பட்டது. இதில் மதுரை ஆதீனத்தின் கார் லேசான சேதம் அடைந்தது. நல்ல வேளையாக ஆதீனத்திற்கு காயம் ஏதுமில்லை. பின்னர் மதுரை ஆதீனம் சென்னை புறப்பட்டு சென்றதால் காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கப்படவில்லை.

வட இந்தியாவில் கனமழை; 7 பேர் பலி

புதுடெல்லி, மே 3: டெல்லி-என்சிஆர் பகுதி உட்பட வட இந்தியாவில் நேற்று அதிகாலை பெய்த கனமழையால் 7 பேர் பலியானார்கள்.

டெல்லி, உபி, காஷ்மீர், இமாச்சல், பஞ்சாப், அரியானா உள்ளிட்ட வடமாநிலங்களில் நேற்று அதிகாலை கனமழை கொட்டித்தீர்த்தது. இதில் 100க்கும் மேற்பட்ட மரங்கள் வேரோடு சாய்ந்தன. 200க்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாகின. மழையால் ஏற்பட்ட நிலச்சரிவைத் தொடர்ந்து ஜம்மு-ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலை மூடப்பட்டது. தென்மேற்கு டெல்லியின் நஜாப்கர் பகுதியில் உள்ள ஒரு வீட்டின் மீது மரம் விழுந்ததில் 28 வயதுடைய ஒரு பெண்ணும் அவரது மூன்று குழந்தைகளும் உயிரிழந்தனர். உத்தர பிரதேசத்தில், மின்னல் தாக்கியதில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

டெல்லி, குருகிராம், பரிதாபாத் மற்றும் மதுராவில் உள்ள சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. டெல்லியில் மட்டும் 100 முதல் 200 மரங்கள் வேரோடு சாய்ந்ததாக நகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர். டெல்லியில் அதிகாலை 5 மணி முதல் 8 மணி வரை மூன்று மணி நேரத்தில் 77 மிமீ மழை பெய்தது. காஷ்மீரில் செனாப் ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் ரியாசி மற்றும் அக்னூர் ஆற்றங்கரைக்கு அருகில் செல்லக்கூடாது என்று மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனைமலை (தேர்வுநிலை) பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம் - பேரூராட்சிகள் நிர்வாகம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
சிறப்பு நிதி திட்டம்-2025-26

ந.க.எண். 203/2025 நாள்: 30.04.2025

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை (தேர்வுநிலை) பேரூராட்சியில் சிறப்பு நிதி திட்டம் - 2025-26 ன் கீழ் கீழ்கண்ட பணிகள் செய்திட ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு உறைகள் முறை ஆன்லைன் வாயிலாக மட்டும் வரவேற்கப்படுகின்றன.

வ. எண்	பணியின் விபரம்	மதிப்பீட்டு தொகை ரூ.	டேவணி தொகை
1	ஆனைமலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 திருநகர், பொன் நகர், வார்டு எண் 12 பூஞ்சோலை நகர் மற்றும் செல்வபுரம் குடியிருப்பு, வார்டு எண் 15 குமரன் குட்டை வீதி, மேல் ஒட்டர் வீதி 1 மற்றும் 2, வார்டு எண் 16 கீரைக்காரர் வீதி, வெள்ளையண்ணன் கோவில் வீதி, கீழ் ஒட்டர் வீதி, வார்டு எண் 17 சாம்புமூத்தி ஐயர் வீதிகளில் தார் சாலைகள் மேம்பாடு செய்தல் மற்றும் சிறுபாலம் அமைத்தல்.	1,92,00,000/-	ரூ.1,92,000/-

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்.
   அ) முன் கலந்தாய்வு கூட்டம் - 14.05.2025 முற்பகல் 11.00 மணி
   ஆ) ஒப்பந்தப்புள்ளி ஆன்லைில் சமர்ப்பித்தல் - 20.05.2025 பிற்பகல் 3.00 மணி வரை
   இ) தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி ஆன்லைன் திறத்தல் - 20.05.2025 பிற்பகல் 3.30 மணி பேரூராட்சி அலுவலகம், ஆனைமலை.
3. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள் விடுமுறை நாள் எனில் அதற்கு அடுத்த வேலை நாளில் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் நடைபெறும்.

(மு.ம) தலைவர், ஆனைமலை பேரூராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம்
செ.ம.தொ.இ.1854/ஒப்பந்தப்புள்ளி/2025
(மு.ம) செயல் அலுவலர், ஆனைமலை பேரூராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம்

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
M-150/2025-26	த.பொ. / பொ.மே	பழுதடைந்த மின்மாற்றிகளைப் பழுதுபார்த்தல் மற்றும் மறுசீரமைப்பு செய்தல்

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb; www.tenders.tn.gov.in
செ.ம.தொ.இ/1830/ஒப்பந்தப்புள்ளி/2025

பொது அறிவிப்பு

ICICI Bank

பதிவு அலுவலகம்: ஐசிஐசிஐ வங்கி டவர்ஸ், சக்லி சர்க்கிள் அருகில், பழைய பாந்த்ரா சாலை, வதோதாரா 390 007. கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ வங்கி டவர்ஸ், பாந்த்ரா–குர்லா வளாகம், மும்பை 400 051.

தங்கநகைக மின்–ஏலம் மற்றும் வரவேற்பு அறிவிக்கை

கீழேக் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் ஐசிஐசிஐ வங்கி லிமிடெட் ("ஐசிஐசிஐ வங்கி") வசமிருந்து அவர்களால் பெறப்பட்ட தங்கநகைகளுக்கு ஈடான கடன்வசதிக்குரிய ("கடன்வசதி") அவர்களது நிலுவைத்தொகையை செலுத்துமாறு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் நிலுவைத்தொகைகளை திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளதால், நாங்கள் அடமானா தங்கநகைகளின் மின்–ஏலத்தை மே 14, 2025 நாளில் நடத்தும் நிர்பந்தத்தில் இருக்கிறோம். ஐசிஐசிஐ வங்கி எந்த முன்னறிவிப்புமின்றி கணக்கை நீக்கும்மின்–ஏலத் தேதியை மாற்ற அதிகாரம் கொண்டிருக்கிறது. ஏலம் https://gold.samil.in – இயங்குதளத்தில் நண்பகல் 12.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிக்குள் நடைபெறும். விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கொடுக்கப்பட்ட இணையதளத்தை காணவும். கடன்தாரர் இறந்திருந்தால், அனைத்து நிபந்தனைகளும் சட்டப்பூர்வ வாரிசுகளுக்குப் பொருந்தும்.

கடன் கணக்கு எண்	வாடிக்கையாளர் பெயர்
கிளை பெயர்: அடவத்தூர்	
418662002987	முத்துக்கருப்பன் பெருமாள்
கிளை பெயர்: அவிநாசி	
065962008311	ராமச்சந்திரன் பி
கிளை பெயர்: சென்னை–செங்கல்பட்டு	
039862004754	பிகரி சரண் தாரை
கிளை பெயர்: சென்னை–புரசைவாக்கம்	
602562063604	எம் அன்பழகன்
கிளை பெயர்: சென்னை–திருப்பத்தூர்	
613662023918	ஜெகன் நாதன் கோவிந்தராஜ்
கிளை பெயர்: சென்னை–வேளச்சேரி	
038562007579	கிருத்திகா தேவி விஸ்வநாதா
கிளை பெயர்: சின்னமனூர்	
404962005404	சரவணகுமார் ஆர்
கிளை பெயர்: கோயம்புத்தூர் – குன்னூர்	
035462003176	பிரபு டேனியல் ஜே
கிளை பெயர்: கோயம்புத்தூர் – சாய்பாபாகாலனி	
155062002712	பிரபு டேனியல் ஜே

கடன் கணக்கு எண்	வாடிக்கையாளர் பெயர்
கிளை பெயர்: இளம்பிள்ளை	
396462003782	ராஜேந்திரன் டி
கிளை பெயர்: ஐம்புகட்டப்பட்டி	
409162001072	வாசு எம்
409162004201	வாசு எம்
கிளை பெயர்: காளப்பட்டி	
728462000527	மணிகண்டன்.
728462000961	மணிகண்டன்.
கிளை பெயர்: மதுரை வில்லாபுரம்	
459062000529	வெங்கடசாமி பழனி
கிளை பெயர்: மேலைஞளநீதுடிகாடு	
617962026335	நமச்சாயம் ஆர்
கிளை பெயர்: நீடாமங்கலம்	
190862011513	சிவசுப்ரமணியா எம் பஞ்சாபகேசுடயார்
கிளை பெயர்: பாடலூர்	
620362020694	கோதைல் ஜி
620362020718	கோதைல் ஜி
கிளை பெயர்: பம்மல்	
251062001648	பாலகங்கா.
கிளை பெயர்: பழமக்குடி	
610762016239	நமசிவாயம் எஸ்
கிளை பெயர்: பொளூர்	
211662005799	வெங்கடேசன் ஏ

கடன் கணக்கு எண்	வாடிக்கையாளர் பெயர்
கிளை பெயர்: ராமேஸ்வரம்	
463662000872	குணபாலன் கே
கிளை பெயர்: செய்யானம்	
300162009634	சுப்பிரமணியன் வி
கிளை பெயர்: சித்தலிங்கமடம். தமிழ்நாடு	
304162005307	அருள் ஆர்
கிளை பெயர்: தொட்டிபட்டி	
618462023089	வேலையுதம் என்
கிளை பெயர்: துறையூர்	
396562005269	நாகராஜன் ஆர்
கிளை பெயர்: உளுந்தூர்பேட்டை	
284062018716	அந்தோணி டி
கிளை பெயர்: வலுத்தூர்	
616162014069	முகமது பாஸுக் நஜமுதீன்
616162014105	முகமது பாஸுக் நஜமுதீன்
616162014152	முகமது பாஸுக் நஜமுதீன்
616162014419	முகமது பாஸுக் நஜமுதீன்
616162014527	முகமது பாஸுக் நஜமுதீன்
கிளை பெயர்: வாலாஜாபேட்டை	
396962007326	ராஜமாங்கநாத் எல் ஆர்

நாள்: 03.05.2025
இடம்: சென்னை, செங்கல்பட்டு, மதுரை, ராமநாதபுரம், தேனி, பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, புதுக்கோட்டை, சேலம்

ஓ/ம் அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ வங்கி லிமிடெட்டுக்காக.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், # 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை – 024 600.

தனிப்பட்ட முறையிலான அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

சர்ஃபாசி சட்டம், 2002 மற்றும் மேற்படி சட்டம் மற்றும் விதிகளின் கீழ் கடனீட்டுச் சொத்துக்களை மீட்பதற்காக அதிகாரப்பூர்வ அலுவலரால் எடுக்கப்பட்ட சுவாதீனத்தின் தொடர்ச்சியாக தனிப்பட்ட முறையில் அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ளவர் டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (சட்டம்), பிரிவு 13(12)–இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 9–இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் 28.02.2024 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினைக் கடன்தாரர்களுக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள தொகையை அவ்வறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார்.

டாடா கேபிடல் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை கடன்தாரர்கள் செலுத்தத் தவறியபடியால் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 (விதிகள்) விதி 8(5)–இன் கீழுள்ள தனது அதிகாரங்களைப் பயன்படுத்திக் கீழே குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்தை (சொத்து) அதிகாரப்பூர்வ அலுவலர் சுவாதீனத்தில் எடுத்து விற்பனை செய்ய உத்தேசித்துள்ளார்.

M/s. டாடா கேபிடல் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை கடன்தாரர்கள் பலமுறை பொது ஏலங்கள் நடத்தியும் செலுத்தத் தவறியதால், அதிகாரப்பூர்வ அலுவலர் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ள சொத்தை, வாங்குபவருக்குத் தேவையான ஆவணங்களை மே 20, 2025 அன்று தனிப்பட்ட முறையில் விற்பனை செய்ய முடிவு செய்துள்ளார்.

பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிப்பது என்னவென்றால், இந்த அறிவிப்பு வெளியிட்ட தேதியிலிருந்து பதினைந்து (15) நாட்களுக்குள் கடன் கணக்கில் உள்ள மொத்த நிலுவைத்தொகையை முழுமையாக செலுத்தவறினால், டாடா கேபிடல் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திடம் அடகு வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள சொத்தின் மீதான சர்ஃபாசி சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002– இன் விதிகள் 8 மற்றும் 9 ஆகியவற்றின் கீழான விதிமுறைகளின்படி நிலுவைகளை திரும்பெறும் பொருட்டு **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "தனிப்பட்ட முறையின்"** நிபந்தனைகளின் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) / சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி / ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	தேதிப்படி நிலுவைத் தொகை
1.	9582057	திரு. பாலாஜி A, திரு. B.A. ஸ்ரீதர், திருமதி சாந்தம்மா ஆதிசேஷசெட்டி, திருமதி வித்யா பிரியதர்ஷினி, திரு. S. ஆதிசேஷசெட்டி	ரூ.1,79,36,463/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தொன்பது லட்சத்து முப்பத்தாறாயிரத்து நானூற்று அறுபத்து மூன்று மட்டும்) மற்றும் 28–02–2024	Rs. 3,00,00,000/- (ரூபாய் மூன்று கோடி மட்டும்)	Rs. 30,00,000/- (ரூபாய் முப்பது லட்சம் மட்டும்)	அடையாளப்பூர்வ	29.04.2025 தேதிப்படி ரூ.2,21,33,211/– (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தொரு லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து இருநூற்று பதினொன்று மட்டும்)

அசையா சொத்தின் விவரம்: (ஒரூர் துணை மாவட்டம் மற்றும் கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம்) அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம். சர்வே எண் 752/2 பாகம், ஒரூர் கிராமம் (ஆவலப்ள்ளி ஹட்கோ), மனை எண் C1 என குறிபிடப்பட்டது, ஒரூர், ஒரூர் Nhs, கட்டம் VI ஒப்புதல்பெற்ற திட்டத்தில் அடங்கிய வணிக மனை. ஏறக்குறைய அளவீடுகள் மற்றும் எல்லைகள் பின்வருமாறு: எல்லைகள்: கிழக்கு: தக்ஷணாமூர்த்தி அவர்களின் நிலம், மேற்கு: S. ஆதிசேஷ செட்டி அவர்களின் நிலம், வடக்கு: ஒரூர் பாகலூர் நெடுஞ்சாலை (Nh–207), தெற்கு: சர்வே எண் 772/1–இல் உள்ள திரு. B.A. ஸ்ரீதர் அவர்களின் நிலம். இந்த எல்லைகளுக்கிடையே உள்ள அளவீடு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 40 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் 42 அடி, வடக்குத் தெற்காக கிழக்குப் பக்கம் 60 அடி, வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் 45.75 அடி, மொத்தம் 2168 சதுர அடிக் கொண்ட காலி நிலம். அமைவிடம் கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், ஒரூர் சார்பதிவு மாவட்டம், ஒரூர் தாலுகா, ராஜேஸ்வரி நகர் (ராஜீவ் நகர்), வார்டு எண் D, பிளாக் எண் 3, புதிய TS எண் 21–பாகம், ஒரூர் கிராம சர்வே எண் 772/1. புஞ்சை பரப்பளவு ஹெக்.0.13.0 தீர்வை ரூ.0.64, இதில் 850 சதுர அடிப் பரப்பளவில் அடங்கிய காலி நிலம் உட்பட. எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு: தனிக் கட்டடம், மேற்கு: S. ஆதிசேஷசெட்டி நிலம், வடக்கு: சர்வே எண் 752/2 பாகம் தற்போது B.A. ஸ்ரீதர் அவர்களுக்கு விற்கப்பட்ட சொத்து, தெற்கு: நாகராஜ செட்டி மற்றும் பிறருடைய நிலம். இந்த எல்லைகளுக்கிடையே உள்ள அளவீடு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 42 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் 43 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் 20 அடி, வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் 20 அடி, மொத்தம் 850 சதுர அடிக் கொண்ட காலி நிலம். அனைத்தும் சேர்த்து மொத்தப் பரப்பளவு 3018 சதுர அடி, திருத்தப்பத்திர ஆவணத்தின் கீ